02.12.2025 OS.No.270/2021 PW2 Name :.தட்சணாமூர்த்தி

குறுக்கு விசாரணை

1. நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சி சம்மன் வந்தது. அதை வாதி என்னிடம் கொடுத்தார். முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் கூறியுள்ள சங்கதிகளை வாதி என்னிடம் காட்டி அதை படித்து பார்த்து சாட்சி சொல்லவேண்டும் என கூறினார். அதன் நகலை தான் சாட்சி சம்மன் என கூறுகிறேன். வாதியை எனக்கு சுமார் 15, 20 ஆண்டுகளாக தெரியும். அவரிடம் நான் கடன் எதுவும் வாங்கவில்லை.
2. முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் நீதிமன்றத்திற்கு வந்து தான் நான் கையெழுத்து போட்டேன். வாதி தயார் செய்து கொண்டு வந்து கொடுத்த பிரமாண பத்திரத்தில் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். சொத்தின் முன் ஆவண எண்.1316/2013 ஆகும். அதை நான் படித்து பார்க்கவில்லை. சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நான் சாட்சி கையெழுத்து போடபோனபோது என்னுடன் வாதியும், பிரதிவாதியும் இருந்தார்கள். வாதிதான் ஆவணத்தை எடுத்துவந்து சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்தார்.
3. அதன்பின் பிரதிவாதியிடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள். வழக்கு சொத்து பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே உள்ள டிலீங் பற்றி எனக்கு தெரியாது. வாதி கேட்டுகொண்டதால் நானும் பிரதிவாதியும் சார்பதிவாளர் அலுவலகத்தில் கையெழுத்து போட்டோம். அதன்பின் பிரதிவாதியை

நான் பார்க்கவில்லை. அதன்பின் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது.

4. சார்பதிவாளர் அலுவலகத்தில் வெளியே நின்றுக்கொண்டிருந்த பிரதிவாதியை நாங்கள் கையெழுத்து போட உள்ளே அழைத்து சென்றோம். கையெழுத்து போட்ட ஆவணத்தில் என்ன விவரம் உள்ளது என்ற விவரம் எனக்கும் பிரதிவாதிக்கும் தெரியாது என்றால் அதில் உள்ள தொகை பற்றி மட்டும் எனக்கு தெரியும். ஆறுமுகம் கேட்டுகொண்டதன் பேரில் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன்.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 02/12/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.12.02 16:48:01 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.